**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU**

# MCOP No. 137/2023

Dated 27.06.2025

ம,சா.1 திரு. புருசோதமன். த|பெ.கரையான்

**ம.சா.1 ஏற்கனவே பிரமாண பத்திரிக்கை தாக்கல் ம.த.சா 1 முதல் 12 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மற்றும் மனுதாரர் தரப்பில் இயலாமை சான்று Exc-1 குறியீடு செய்யப்படதன் பேரில் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் ரோட்டை கடக்க முயன்றபோது தான் இந்த விபத்து நடந்ததா என்றால் இல்லை. என் கவனகுறைவாலும், அசட்டையாலும், அஜாக்கிரதையாலும்தான் இந்த விபத்து ஏற்ப்பட்டது என்றும் நான் கவனமுடன் இருந்திரந்தால் இந்த விபத்து ஏற்ப்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இந்த மனு நீதிமன்றத்தில் 6 மாத காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு நிலைக்க தக்கதல்ல, தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் விபத்து காலத்தில் எங்கு பணிபுரிந்தேன் என்றால் கார்னிசன்டில் ஹவுஸ் கீப்பராக பணிபுரிந்தேன். அவ்வாறு நான் பணிபுரிந்ததை நிரூபிக்க ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சம்பள பில்லை தவிர மற்ற அனைத்து ஆவணங்களையும் தாகல்கல் செய்துள்ளேன் சம்பள பில் தொலைந்து விட்டது. தொடர்ந்து அதே நிறுவனத்தில் பணிபுரிந்துவ ருகிறேனா என்றால் இல்லை. வேறு எங்கு வேலை செய்கிறேன் என்றால்வேறு எங்கும் வேலை செய்யவில்லை. எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள் உண்டு. அவர்களில் 2 பெண்கள், ஒருவர் ஆண். எனது மனைவி எந்த நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்றால் அவர் வேலைக்கு எங்கும் செல்லவில்லை. நாங்கள் ஐந்துபேரும் எவ்வாறு நாங்கள் பராமரித்து உணவு, உறவிடம் பெற்றுவருகிறோம் என்றால் என் மனைவி களனி வேலைக்கு சென்று சம்பாதித்து வீட்டை பராமரித்து வருகிளார். எனக்கு விபத்தினால் எங்கெங்கு காயம் ஏற்ப்பட்டது என்றால் இரண்டு மேற்பறகள் உடைந்துவிட்டது. வலது காலில் எலும்பு உடைந்து மேலே வந்துவிட்டது. இடுப்பு எலும்பு மேலே ஏறிவிட்டது. தற்போது நான் எந்த சிகிச்சையும் பெறவில்லை என்றால் சரிதான். காயம் சரியானதால்தான் நான் மேல்சிகிச்சை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தற்போது எனக்கு கால் வலித்து கொண்டு தான் உள்ளது. விபத்து என் தவறுகையால் ஏற்ப்பட்டதால் எனக்கு எந்தவித நட்ட ஈடும் எதிர்மனுதாரர் நிறுவனம் கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது என் மீது முதல் எதிர்மனுதாரரின் வாகனம் இடிக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுக்கப்பட்ட புகார் போலிசாரால் முடிக்கப்பட்ட விவரம் எனக்குத் தெரியுமா ஏ்னறால் தெரியாது. நான் தவறான புகார்

கொடுத்துவிட்டேன் என்பதால் தவறுகை காரணமாக என் புகார் முடிக்கப்பட்டு மூடப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்தவித நட்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 27.06.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

Witness Sd/-XXXX

Sd/-Tmt.T.JayashreeM.L.
தலைமை குற்றவியல் நடுவர்,
**செங்கல்பட்டு.**